மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 215/22 |
| பெயர் | : | மாரியப்பன் (PW1) |
| த/பெ. க/பெ | : | |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | சிறப்பு உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12 th day of March 2025

**முதல் விசாரணை**

1) என் பெயர் மாரியப்பன் வயது 59 புளியம்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன்.இவ்வழக்கில் தலைமறைவாக உள்ள ஆனஸ்ட்ராஜ் எதிராக கு.வி.மு.ச பிரிவு 82 ன் கீழ் Crlmp No 98/2025 தாக்கல் செய்துள்ளேன்.அதன் மீதான 03.03.2025 தேதியிட்ட உத்தரவின் படி அறிவிப்புகளை தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ஓட்டப்பிடாரம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம், நீதிமன்ற அறிவிப்பு பலகை ஆகியவற்றில் ஒட்டி சார்பு செய்தேன்.எதிரி வசித்த ஊரில் தண்டோராவும் போடப்பட்டது.அதற்கான சான்றிதழ்கள் மற்றும் புகைப்படங்களை தாக்கல் செய்துள்ளேன்.அது தவிர 11.03.2025 அன்று தினகரன் நாளிதழிலில் அறிவிப்பும் வெளியிட்டுள்ளேன்,மேற்படி அறிவிப்புகளை வெளியிட்டதற்காக தனது அறிக்கையை தாக்கல் செய்கிறேன்.அந்த அறிக்கை EX.C1 ஆகும்.ஆனால் இன்று வரையில் மேற்படி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை.எனவே மேற்படி எதிரி அறிவிக்கப்பட்ட எதிரியாக விளம்புகை செய்யுமாறு வேண்டுகிறேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.